1981 ஆகஸ்ட் 22]

பேரூராட்சிப் பகுதிகளுக்கும் ஆட்டோ உரிமம் வழங்கும் திட்டம்.

* வினா எண் 18—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிப் பகுதிகளுக்கும் ஆட்டோ லைசன்ஸ் வழங்க செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அமுல் நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:
(அ) மற்றும் (ஆ): பேரூராட்சிப் பகுதிகளில் ஓட்டுவதற்கான ஆட்டோ ரிக்ஷா உரிமங்களை உள்ளூர் காவல் துறை அதிகாரிகளைக் கலந்தாலோசித்து வழங்கும்படி வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு, 30—5—1978 நாளிட்ட உள்துறை அரசாணை எண் (பல்வகை) 1201-ல் அரசு உத்திரவிட்டுள்ளது. இது வரையில் பேரூராட்சிப் பகுதிகளில் ஓடுவதற்காக 33 ஆட்டோகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 10-10]

திரு. எம். சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளிலாவது, ஆட்டோ ரிக்ஷாக்களில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல அரசு அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இன்னும் அதற்கான எந்த முடிவினையும் அரசு எடுக்கவில்லை. இதே போன்று 3 பயணிகளை ஆட்டோக்களில் ஏற்ற அனுமதி வேண்டும் என்று நகர்ப்புறத்திலேயிருந்துகூட அனுமதி கேட்கிறார்கள். ஆனால் அப்படி 3 பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்வதற்குண்டான தகுதி ஆட்டோக்களுக்கு இருக்கின்றதா என்பதை அரசு ஆலோசித்த பின்னர்தான் முடிவு எடுக்க வேண்டும். அதற்குப் பிறகு தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து அவர்களின் ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட அனுமதியை அளிக்கின்றபோது, டாக்சி சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இதில்விருப்பம் இல்லை என்று தெரிகிறது. எனவே இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கலந்து ஆலோசித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளில் ஆட்டோ ரிக்ஷாக்களை ஓட்டுவதற்காக 30—5—1978 லேயே அனுமதி வழங்கப்பட்டும் இன்னும் போதுமான ஆட்டோக்கள் ஓடவில்லை என்கிற நிலைமை இருக்கிறது

என்று அமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் பேரூராட்சிப் பகுதிகளிலேயாவது, விண்ணப்பிக்கும் நபர்களுக்கு கட்டாயமாக அனுமதி வழங்க உடனடியாக அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, யார் லைசன்சு வழங்க அனுமதி கேட்டாலும் அரசாங்கத்திற்கு எந்தவிதமான தடையும் இல்லை. யாரும் கேட்கவில்லை என்பதுதான் இங்கே இருக்கிற பிரச்னை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட யாரிடமாவது சொல்லி, அந்த வண்டிகளை ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அரசுக்கு எந்தவிதமான தடையும் இல்லை. அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது 3 பேர்களை ஆட்டோக்களில் ஏற்றிச் செல்ல அனுமதி வேண்டும் என்று நகர்ப்பகுதியிலே இருந்து கூட கோரிக்கைகள் வந்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி நெருக்கடிப் பகுதிகளில் 3 பேர்களை ஆட்டோக்களில் ஏற்றிச் செல்கிற நிலைமை ஏற்கெனவே நகர்ப்புறங்களில் இருக்கிறது. அது மட்டும் அல்லாமல், 6 ஆயிரம் ரூபாய் விலை விற்றுக் கொண்டிருந்த ஆட்டோக்கள், இப்போது 10 வருடங்கள் கழித்து 24 ஆயிரம் ரூபாய்க்கு விற்கின்றன. எனவே, ஆட்டோக்களின் உரிமையாளர்களுக்கும், வாடகைக்கு ஓட்டுகிறவர்களுக்கும் வசதியாக இருக்கும்பொருட்டு, அவர்களுக்கு தகுந்த வருமானம் வரும்பொருட்டு, 3 பேர்களை ஏற்றிச் செல்வதற்கு அரசு அனுமதி வழங்க அமைச்சர் அவர்கள் அவசியம் முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, அப்படி நகர்ப்புறங்களிலே சில இடங்களில் தவறுகள் நடைபெறுகின்ற காரணத்தினால்தான் அவைகளையெல்லாம் தடுப்பதற்கு, ஆங்காங்கே தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் ஏற்கெனவே சொன்னது போல், 3 பேர்களை ஏற்றிச் செல்வதற்கு ஆட்டோக்கள் தகுதியாக இருக்குமா என்பதை முதலில் பார்க்க வேண்டும். அப்படி தகுதியாக இருந்தால், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேச வேண்டும். அதன் பிறகுதான் முடிவு எடுக்கலாம் என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

1981 ஆகஸ்ட் 22]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகர்ப்புறங்களிலே இரவு 7 மணிக்கு மேல் ஆட்டோக்களில் ஏறிச்சென்றால் 1 ரூபாய்க்கு 20 பைசா அதிகம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி அதிகம் கொடுக்க முன் வராத பயணிகளை ரோட்டிலேயே வைத்து கேவலப்படுத்திப் பேசுகிறார்கள். அப்படி ஒரு அனுபவம் எனக்குக் கூட ஏற்பட்டது. இப்படி அதிகமாகக்கட்டணம் கேட்பது நியாயமா? இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முன்பு சொன்ன கருத்தையே தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். யாரோ சிலர் அப்படிச் செய்கிறார்கள், இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லிவிட்டால் நடவடிக்கை எடுக்க வழி கிடையாது. குறிப்பிட்டு யார் அப்படிச் செய்தார்கள் என்று பார்த்து வண்டி நெம்பர் போன்றவற்றை எழுதிக் கொடுத்தால், கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும், அதனால் மற்றவர்கள் திருந்த வழி ஏற்படும். ஆகவே அந்த அடிப்படையில் உறுப்பினர்கள் ஒத்துழைத்தால் நல்லது. ஒட்டு மொத்தமாக சொல்லிவிட்டால் நடவடிக்கை எப்படி எடுக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த வகையில் செய்தால், இந்த அரசும் தீவிரமாக நடவடிக்கை எடுத்து தவறுகளை களையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது பல இடங்களில் ஆட்டோக்களில் 3 பேர்களை ஏற்றிச் செல்கிறார்கள். அப்படிப்போவது தான் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதுகிறேன். ஏனென்றால் ஒருவர் மட்டும் சென்றால், தூக்கிப்போட்டு கீழே விழுந்து விடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, இவைகளையும் கருத்தில் கொண்டு, ஆட்டோக்களில் 3 பேர்கள் போவதற்கு அனுமதியை சட்டப்பூர்வமாக வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கனவே நான் அதற்கான பதிலைச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று பேர்கள் போனால்தான் பாதுகாப்பு என்று சொல்கிறார்கள். மூன்று பேர்களுக்குக் குறைவாக ஏறக்கூடாது என்று நாங்கள் உத்தரவு போடமுடியாது. ஒருவேளை தனியாக உறுப்பினர் அவர்களுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டால் என்ன செய்வது என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும்.